

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
July 2021




# பரிசுத்த வேதாகமம்



## HOLY BIBLE

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

*Every Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube : the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan






தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 ஜுலை 2021 கனி 8



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39


குடும்பமாக கர்த்தருடைய பணியைச் செய்ய ஒப்புக்கொடுக்கப் பட்டவர்கள் தேவை 6379350509

**பாடம்** : 20
**தலைப்பு** : மன்னா – Manna
**வேத வாசிப்பு** : சங்கீதம் 78:24

1. வானத்தின் தானியம் - சங்.78:24
2. தூதர்கள் சாப்பிடும் அப்பம் - சங்.78:25
3. மன்னாவைப்புசித்தும் மரித்தார்கள் - யோவா.6:48-51

தேவனோடு பேசு
சுவாசம் நின்று போகவில்லை
தேவனோடு நட
சக்தி அற்று போகவில்லை






Talk with God
no breath is lost
Walk with God
no strength is lost

**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA





## வேத அறிவுப் போட்டி எண்: 251

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யாருடைய ஜீவன் எவனுடைய ஜீவனோடே இணைக்கப்பட்டிருக்கிறது என்றார்கள்?
2. எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. பிறனுடைய வஸ்திரத்தை ஈடாக வாங்கினால், எதற்கு முன்னே அதை அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிடுவாயாக என்றார்?
4. பத்மு தீவிலே இருந்தபோது எந்த அப்போஸ்தலனுக்கு கர்த்தர் திருவுளம்பற்றினார்?
5. உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக என்று இஸ்ரவேலுக்குச் சொல்லப்பட்டதா?
6. நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு எவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் என்றார்?
7. இஸ்ரவேல் சபையாரை கூடிவரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் எத்தனை வெள்ளிப் பூரிகைகளை செய்தார்கள்?
8. அவர் மரித்தோருக்குத் தேவனாயிராமல் எவர்களுக்குத் தேவனாயிருக்கிறார்?
9. இஸ்ரவேலின் பாவக்கிரியையை எடுத்து அக்கினியால் எரித்து, அதை நொறுக்கி, தூளாய்ப்போகுமட்டும் அரைத்து, அந்தத் தூளை மலையிலிருந்து ஓடுகிற ஆற்றிலே போட்டவன் யார்?
10. தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்கு என்னவாயிருக்கமாட்டான் என்றார்?

## வேதாகம ஆய்வு... 36 எரேமியா - Jeremiah



1. யேகோவாவின் நியமம்
2. எரேமியா பட்ட கஷ்டங்களினிமித்தம் 'துக்கிக்கும் தீர்க்கதரிசி' எனப்பெயர் பெற்றான்.
3. காவற்கிடங்கில் அநேகநாள் இருந்தான் – எரே.37:16
4. துரவிலே போட்டார்கள் – எரே.38:6
5. இவனால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் – மத்.2:18 ல் நிறைவேறிற்று
6. எரேமியா எகிப்து தேசத்தில் சகல யூதர்களை எச்சரித்தான் – எரே.44:24

சிறுவர் பகுதி



## ரூத் - Ruth

வேத பகுதி: ரூத் 1:1-22

அன்பு தம்பி, தங்காய்! எல்லாரும் எப்படி இருக்கிறீங்க? கர்த்தருடைய கிருபையில் நல்ல சுகமாக இருப்பீங்க என நம்புகிறேன். இப்போது 'ரூத்' என்ற ஒரு மோவாபிய பெண்ணைப் பற்றிச் சொல்லப்போகிறேன். மோவாபியர் என்றால் கர்த்தரை தெய்வமாக வணங்காதவர்கள். ஒரு சமயம் பெத்லகேமிலிருந்து ஒரு மனுஷன் தன் மனைவி நகோமியோடும் தன்னுடைய இரண்டு மகன்களோடும் மோவாப் தேசத்துக்குப்போய் அங்கேயே வசிக்க ஆரம்பித்தான். அப்படி அங்கே இருக்கும்போது தன் மகன்களுக்கு அந்த தேசத்திலே பெண்பார்த்து திருமணம் செய்து வைத்தான். பத்து வருஷம் கழித்து என்ன நடந்தது தெரியுமா? அந்த மனுஷனும் அவனுடைய இரண்டு மகன்களும் இறந்துவிட்டார்கள். ஐயோ! பாவம், அப்படித்தானே நினைக்கிறீங்க. ஆமா, பாவம் தான். அதற்கப்புறம், அவனுடைய மனைவி நகோமி, பெத்லகேமில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஆகாரம் கொடுத்து ஆசீர்வதிக்கிறார் என கேள்விப்பட்டாள். உடனே என்ன செய்தாள் தெரியுமா? தன் மருமகள்கள் இரண்டு பேரையும் பார்த்து, நீங்க உங்கள் தாய் வீட்டுக்குப் போய்விடுங்க நான் என்னுடைய தேசத்துக்குப் போகிறேன் என்றாள். அப்பொழுது ஓர்ப்பாள் என்ற ஒரு மருமகள் அதிகமாய் அழுது தன் மாமியை முத்தமிட்டு தன் தாய்வீட்டுக்கு போய்விட்டாள். பாருங்கள்! தன் மாமியிடம் எவ்வளவு அன்பாக இருந்திருக்கிறாள்.

இன்னொருத்தி ரூத். இவளோ, தன் மாமியை விட்டு போகமாட்டேன் என்று ஒரே அடம் பிடித்துவிட்டாள். என்ன செய்தாள் தெரியுமா? நான் என் தாய்வீட்டுக்கெல்லாம் போகமாட்டேன், நீங்க போகும் இடத்துக்குத் தான் வருவேன். உங்க ஜனம் தான் என் ஜனம் உங்க தெய்வம் தான் என் தெய்வம், மரணம் தான் உங்களை விட்டு என்னைப் பிரிக்க வேண்டும், இதற்குக் கர்த்தர் தான் சாட்சி என்று சொல்லி தன் மாமி நகோமியை விடாமல் பிடித்துக்கொண்டாள். பிறகு என்ன செய்வது? இருவரும் பெத்லகேமுக்குப் போய்விட்டார்கள்.

அங்கு போனபின்பு ரூத் தன் மாமிக்கு உதவியாக இருந்தாள். வயலில் போய் கதிர் பொறுக்கிக் கொண்டுவருவாள் இப்படியாக ரூத்தும் கர்த்தரை ஏற்றுக்கொண்டதால் வயலின் எஜமான் போவாஸ் ரூத் மேல் இரக்கப்பட்டு கதிர் பொறுக்க அனுமதித்தான். ரூத் நல்ல ஒழுக்கமுள்ளவளாக இருந்ததால் போவாஸ் அவளைப் பார்த்து நீ மற்ற வாலிபருக்குப் பின்னாலே போகாமல் இருக்கிறபடியால் நீ குணசாலியாய் இருக்கிறாய் என்று சொல்லி அவளைத் திருமணம் செய்துகொண்டான். பார்த்தீர்களா? ரூத் கர்த்தரை தெய்வமாக ஏற்றுக்கொண்டதால் கர்த்தர் அவளை ஆசீர்வதித்தார். போவாஸுக்கும் ரூத்துக்கும் ஒரு ஆண்பிள்ளை பிறந்தது. அவனுக்கு ஓபேத் என்று பேர். அவன் யார் தெரியுமா? தாவீது ராஜா இருந்தாரே, நிறைய பாட்டுகளெல்லாம் சங்கீதப்புஸ்தகத்தில் எழுதி வைத்துள்ளாரே, அவருடைய தாத்தா தான் இந்த ஓபேத். பார்த்தீர்களா, கர்த்தரைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டால் பாக்கியம் கிடைக்கும். நாமும் ஆசீர்வாதமாக இருப்போம், நீங்களும் கர்த்தரைப் பற்றிக்கொள்வீர்களா? OK Bye!

### மனப்பாடவசனம்


**"உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" ரூத் 1:16**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 ஜூலை - 2021 கனி - 8

ஆசிரியருரை

## கர்த்தருடைய ஆலயம்
## The House of The Lord



**க**ர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது அரசன் விருப்பம் கொண்டான். ஆனால் அதை கர்த்தராகிய தேவன் விரும்பவில்லை. உன்னுடைய கர்ப்பப்பிறப்பே அதைச் செய்வான் என்றார். தாவீதின் கரம் இரத்தம் சிந்திய கரங்களாக இருந்தபடியால் அவனுக்கு ஆலயத்தை கட்ட கர்த்தர் அனுமதி கொடுக்கவில்லை. சிலர் கர்த்தருக்காக பல காரியங்களைச் செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர். அது பிதாவாகிய தேவனுக்குப் பிரியமானதா என்பதை பற்றி அவர்கள் சிந்திப்ப தில்லை. தனக்குவேண்டியவைகளை செய்துகொள்ளுவதைப் போல தேவனுக்கும் செய்ய முற்படுகிறார்கள். ஆனால் தேவன் இதற்கு அனுமதிகொடுப்பதில்லை. சிலர் கர்த்தர்மேல் உள்ள அன்பினாலும் வாஞ்சையினாலும் தேவனுக்காக நாங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்று சொல்லி, தங்களுடைய இச்சையினால் பொன்னினாலும் வெள்ளியினாலும் ஞாபகார்த்தமாக ஒரு சொரூபத்தை பூமியிலே உள்ளவைகளுக்கு ஒப்பாக உண்டாக்கி வைக்க விரும்புகின்றனர். இப்படிச்செய்வதை தேவன் விரும்புவாரா என்பதைக்குறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. தேவன் மனிதனுக்காக உண்டாக்கியவைகள் மனிதனுடைய தேவைகளைச் சந்திக்கிறது. மனிதன் தேவனுக்காக உண்டாக்குபவைகள் தேவனுடைய தேவைகளைச் சந்திக்காது. அவர் மனிதனுடைய கரங்களில் யாதொன்று தேவையானதுபோல அவர் எதிர்பார்க்கிறவரல்ல. தாவீது தன் தேவனுக்காக ஒரு ஆலயத்தைக் கட்ட அநேக பொருட்களை சவதரித்துவைத்தான். ஆனால் அவனுடைய கர்ப்பப்பிறப்பான சாலொமோன் ஆலயத்தைக் கட்டினான்.

சாலொமோன் தன்னுடைய இஷ்டப்படி ஒரு இடத்தை தெரிந்துகொள்ளாமல் "எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான்" (2நாளா.3;1). இந்த இடத்தை அந்நாட்களிலே தாவீது ஒர்னான் என்னும் ஒரு மனிதனிடம் வாங்கினான். பொதுவாக ஜனங்கள் கோவில் கட்ட இடத்தை தெரிந்துகொள்வது புறம்போக்கு நிலங்களையும், ஒன்றுக்கும் உதவாத நிலங்களையும், ஊருக்கு ஒதுக்குப்புறம்பாக இருக்கும் இடங்களையுமே அதிகமாக தெரிந்துகொள்வார்கள். ஆனால் தாவீது அதை இலவசமாக யாரிடமும் வாங்காமல் அதை விலைகொடுத்து வாங்கினான் என்று பார்க்கிறோம். ஒரு ராஜா விலைகொடுத்து வாங்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் கர்த்தருடைய

காரியத்தில் யாரிடமும் அநியாயமாக அதைப்பெற்றுக்கொள்ளாமல் மனப்பூர்வமாகவும் விலைக்கிரயமாகவும் அதை கொடுத்த ஒர்னான் என்னும் மனிதனிடமிருந்து பெற்றான். அன்றும், இன்றும் தேவன் யாரிடமும் கட்டாயப்படுத்தி எதையும் எதிர்பார்ப்பதில்லை. சாலொமோன் ராஜா "கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருந்தது" (1இரா.6:2). இந்த ஆலயத்தில் என்ன இருந்தது என்ற கேள்வி அநேகருக்கு எழும்பும். யாதொரு விக்கிரகமும் அங்கே இல்லை. "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஓரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணினபோது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை" என 2நாளா.5:10-ல் காண்கிறோம். சாலொமோன் கட்டின கர்த்தருடைய ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்றைக்கு ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படுமானால் எவ்வளவு செலவு செய்யப்படும், எத்தனை நாள் அதை விழாவாக கொண்டாடுவார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் அன்றைய நாட்களில் "ராஜாவாகிய சாலொமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் சகல ஜனங்களும் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள். எட்டாம் நாளை விசேஷத்த ஆசரிப்பு நாளாய்க் கொண்டாடினார்கள்; ஏழுநாள் பலிபீடத்துப் பிரதிஷ்டையையும், ஏழுநாள் பண்டிகையையும் ஆசரித்தார்கள்" (2நாளா.7:5,9). நீங்கள் எப்போதாவது இவ்வளவு திரளான பலிசெலுத்தி ஒரு ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நிச்சயமாக கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். அதுமாத்திரமல்ல இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க ஏழுவருஷம் சென்றது.

பிரதிஷ்டையின் நாளின்போது சாலொமோனின் விண்ணப்பம் என்னவென்றால்; "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும், உம்முடைய பலத்த கரத்தினிமித்தமும், ஓங்கிய உம்முடைய புயத்தினிமித்தமும், தூரதேசங்களிலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக நின்று விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல, உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக" என்று விண்ணப்பம்பண்ணினான் (2நாளா.6:32,33). நீங்களும் நானும் விண்ணப்பம்பண்ணியிருந்தால் எப்படி விண்ணப்பம்பண்ணியிருப்போம்? சாலொமோனோ, ஜீவனுள்ள தேவனை அறியாத ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவனைநோக்கி: இந்த ஆலயத்துக்கு நேராக அவர்கள் நின்று விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்பீராக என்று மன்றாடினான். அது மாத்திரமல்ல; "தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" என்றான் (2நாளா.6:18). ஆம், கர்த்தருக்காக கட்டின ஆலயம் பெரியது என்றோ அல்லது தான் கட்டியபடியால் அது தன்னுடைய ஆலயம் என்றோ அவன் சொல்லிக்கொள்ளும்படியாக விரும்பவில்லை. தேவனை



நம்முடைய புருஷனுக்கும் இடையே சண்டைகள் சச்சரவுகள் எழும்புமானால் பேசாமல் அமைதியாக இருந்துவிட்டால் எல்லாம் சூரியன் அஸ்தமிப்பதற்குள் சரியாகி விடும். அதைச்செய்யாமல் நாள்கணக்காக அதை பெரிதுபடுத்தி பழையவைகளை கிளறிக்கொண்டே இருப்போமானால் பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரவாய்ப்பு இல்லை. வேதாகமம், "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" (நீதி.17:28) என்று கூறுகிறது. வீட்டில் எழும்பக்கூடிய கோபத்தை "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்" நீதி.15:1-ன் படி ஸ்திரீகளாகிய நாம் பொறுமையுடன் நடந்துகொள்ளும்போது குடும்பங்களில் சமாதானம் ஏற்படும். சமாதான கர்த்தர் வந்தும் இன்னும் குடும்பங்களில் சமாதானம் இல்லை என்றால் அதற்கு காரணம் என்ன? சமாதான கர்த்தருடைய வசனம் அங்கு இல்லை என்றே சொல்வேன். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (எபேசி.5:22). உண்மையிலே நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களானால் நிச்சயமாக எந்த நிபந்தனையுமின்றி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியவேண்டும். நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் வசனத்தின்படி "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ.3:17).

புதிய ஏற்பாட்டில் லூக்கா 1-ம் அதிகாரத்தில் நாம் காணும் ஸ்திரீகள் நமக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாயிருக்கின்றனர். மலடியாயிருந்த எலிசபெத்தும் அவள் புருஷன் சகரியாவும் "கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்". இந்த தம்பதியினர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை காரியத்தை செய்து குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனபடியினால் அவர்களுக்கிடையே எந்த கருத்து வேறுபாடும் இருந்ததாக வேதத்தில் காணமுடியவில்லை. கர்த்தருக்குள்ளிருக்கும் நாமும் இவர்களைப்போல் இருந்தால் நிச்சயம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்போம். "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்... கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே.4:27,29). இப்படிச் செய்வீர்களானால், எதிராளியாகிய பிசாசுக்கும், பிசாசினால் அனுப்பப்படுகிறவர்களுக்கும் நம்முடைய குடும்பத்தில் இடமிருக்காது. ஒவ்வொருநாளும் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு நாளும் வாழும்படியாக உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். குடும்பங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. அதை பாதுகாப்பது நமது கடமை.

**ஜெபியுங்கள்**



- உலகில் உள்ள அனைவரும் தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...
- கர்த்தருடைய சபை கூடுகைகள் தொடர...
- சபை போதகர்களுக்காக...
- கொரோனா தொற்றிலிருந்து ஜனங்கள் காக்கப்பட...
- மருத்துவர்களுக்காக...
- உலகில் பொருளாதாரம் மேம்பட...
- ஆட்சியாளர்கள் சிறப்பாக ஆட்சி செய்ய...

பெண்கள் பகுதி

## பெண்ணாய் பிறந்தவளே பகுதி – 1

**Oh! Ye Who Born As A Woman Part - 1**

*-Glory Arjunan*



பிறக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்ற கேள்வி முதலாவது கேட்கப்படுகிறது. ஏன் இந்தக் கேள்வி. ஆணாக பிறந்தால் ஒரே அமர்க்களம். பெண்ணா பிறந்தால் பெற்ற தகப்பன் கூட தன் பிள்ளையைப் பார்க்க விரும்புவதில்லை. முதன் முதலில் ஒரு பெண்ணை ஆணிலிருந்து நம்முடைய பிதாவாகிய தேவன் உண்டாக்கினார். இது மாபெரும் அற்புத செயல் அல்லவா? இன்று ஒரு பெண்ணையும் ஆணையும் பெற்று எடுப்பது ஒரு பெண்ணாக இருக்கிறாள். ஆனால் உலகத்தின் முதன் முதலில் ஆணிலிருந்தே ஒரு பெண் வெளிப்பட்டாள். அப்பொழுது வெளிப்பட்ட அந்தப் பெண்ணைப்பார்த்து முதல் மனிதனாகிய ஆதாம் "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" (ஆதி.2:24). அன்று ஆதாம் அவளை தன் மனைவியாக ஒரே சரீரமாக நேசித்தான். அந்த நேசம் இன்று அநேகரிடம் இருப்பதில்லை.

இந்த ஆதாம் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீ பிசாசுக்குச் செவிகொடுத்ததினால் இருவரும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று... அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது" (ரோம.5:12,14). ஆதாமின் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீயை பயன்படுத்தி பிசாசு உலகத்தில் பாவத்தை விதைத்தான். ஆகையால் இன்றும் ஏவாளை குறித்து பேசப்பட்டு வருகிறது. பெண்களைக்கொண்டு பிசாசு தந்திரமாக ஏமாற்றி தன்னுடைய வேலைகளை ஆரம்பித்துவிடுவான் என்று பேசப்படுகிறது. ஏவாளின் வழி வந்த மரியாள் என்ற பெண்ணைக் கொண்டு பாவத்தை ஜெயிக்கும்படி பிதாவாகிய தேவன் பரிசுத்தரை பெற்றெடுக்கும்படி அநுக்கிரகம் செய்தார். உலகத்திலே உள்ள அநேக பெண்களுக்கு கிடைக்காத ஒரு மாபெரும் பாக்கியத்தை மரியாள் பெற்றாள். பெண்ணாய் பிறந்துவிட்டாளே என நினைத்து, ஏதோ இடி விழுந்த குடும்பம்போல சிலர் மாறிப்போகின்றார்கள். மரியாள் என்ற பெண் பெற்றெடுத்த மாமன்னன் இயேசுவினாலே உலகத்திற்கு இரட்சிப்பு வந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா? "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (ரோம.5:17).

இச்செய்தியை வாசிக்கும் அன்பு பெண்ணே, நமது ஆதித்தாய் ஏவாளினால் வந்தது பிரச்சனை அதேவேளையில் மரியாள் என்ற பெண்ணின் மூலமாக உலகஇரட்சகர், சமாதானபிரபுவின் பிறப்பு உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இன்றைக்கு அநேக குடும்பங்களில் சமாதானமில்லை. சில ஸ்திரீகள் தங்கள் குடும்பத்திலுள்ள பிரச்சனைகளைக் குறித்து வேதனையுடன் அழுதுகொண்டு மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிறார்கள். ஸ்திரீகளாகிய நமக்கும்



அறியாத புறஜாதியார் அதின்வாயிலாக ஜீவனுள்ள தேவனை அறிந்துகொள்ளவேண்டும் என்பதுவே அவனுடைய விருப்பமாக இருந்தது. அந்த மகத்துவமான தேவனை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக தேவாலயத்தை கட்டினான் எனக்காண்கின்றோம்.

அன்பானவர்களே, தேவன் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். அவர் பூமியிலிருந்து தம்மைநோக்கி கூப்பிடுவோரை கண்ணோக்கிப்பார்க்கிறார். அவரை நோக்கிப்பார்க்க ஒரு இடம் வேண்டும் என்பதற்காகவே சாலொமோன் ஒரு ஆலயத்தை அவருக்குக் கட்டினான். அந்த ஆலயம் கர்த்தர் தங்குவதற்காக அல்ல. ஜனங்கள் பொதுவாக தவறாக புரிந்துகொள்ளுகிறார்கள். ஒரு ஆலயம் என்றால் அங்கேதான் கர்த்தர் இருப்பார் என்று எண்ணுகின்றனர். அப்படியல்ல. ஜீவசுவாசத்தை மனிதனுக்குக் கொடுத்த ஜீவனுள்ள கர்த்தர் அவனுள் வாழ விரும்புகிறார். ஆகையால் பவுல் பிரசங்கிக்கும்போது; "உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை" என்று பிரசங்கித்தார் (அப்.17:24). வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படி எனக்காக நீங்கள் எப்படிப்பட்டகோவிலைக் கட்டுவீர்கள் என்று கர்த்தர் கேட்கிறார். ஆண்டவருக்காக ஒருவரும் ஒருக்காலும் ஒரு இருப்பிடத்தைக்கட்டமுடியாது.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17). நாம் தேவனுடைய ஆலயமாக இருந்தால் எப்படியிருக்க வேண்டும்? நடமாடும் ஆலயமாகவும் எங்கும் எப்போதும் பிதாவாகிய தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாகவும், அவருடைய நாமத்தை அறிவிக்கிறவர் களாகவும், அவருடைய வாசனையை வெளிப்படுத்துகிறவர் களாகவும் இருக்வேண்டும். இந்த ஆலயத்தை நாம் தவறான இடத்திற்கு கொண்டு சென்றால் நம்மில் வாசமாயிருக்கிற தேவனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் துக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருப்போம். ஆலயங்களை தூய்மையாக வைக்க முயற்சிக்கிற நாம் நம்மில் வாசமாயிருக்கும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடுக்கலாமா? நாம் பூமியில் காண்கிற யாவும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. பூமியின் மீதெங்குமிருக்கிற யாவும் ஒரு நாளில் அழிந்து வெந்து உருகிப்போகும். இப்படி அழிந்துபோகக்கூடிய இடத்திலும், மனிதர்கள் அவருக்காக கட்டிய இடத்திலும் தேவன் இல்லை. அவர் உங்களில் வாசமாயிருக்க விரும்புகிறார். ஆகையால் இயேசு கிறிஸ்து சொல்லும்போது; "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). சாலொமோன் கட்டின ஆலயம் கர்த்தருடைய ஆலயம், தேவனுடைய ஆலயம் என்று அழைக்கப்பட்டது. அதைப்போல இன்று கர்த்தடைய நாமத்தினாலே கூடிவரக்கூடிய சபையார், கர்த்தருடைய சபையார் என்றும் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே கூடியவருகிறபடியால் கிறிஸ்துவின் சபையார் என்றும் தான் அழைக் கப்படுகிறார்கள். அப்படியாக கர்த்தருடைய நாமத்தினாலே கூடியவந்த சபையாரைக் குறித்து நாம் ரோமர் 16:16-ம் வசனத்தில் படிக்கிறோம். அவருடைய நாமத்தினாலே கூடி வந்து மற்றொரு நாமத்தினாலே அழைக்கப்படுவது விந்தையாக இருக்கிறது!

பெந்தெகொஸ்தே ஆலயம் அல்லது சபை என்று அழைக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். பெந்தெகொஸ்தே என்பது ஐம்பதாவது நாள் அது ஒரு பண்டிகையைக் குறிக்கிறது. அந்நாளில் சபை துவங்கியதால் அதை வைத்திருப்பதாக சொல்கிறார்கள். அமாவாசை நாளில் பிறந்த குழந்தைக்கு பெயர் வைத்ததுபோல் இருக்கிறது. குழந்தை யாருடையது. அது அமாவாசைக்கு சொந்தமானது அல்ல. பெற்றோருக்கு சொந்தமானது. அதைப்போல கிறிஸ்துவானவர் பிதாவுக்கு சொந்தமானவர். அவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவருடைய நாமத்தினாலே நாம் கூடுகிறோம். அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பெறுகிறோம். அவரே சபையின் தலைவர். அவரே எல்லாருக்காவும் மரித்தவர். அவரை ஏற்றுக்கொண்ட சீஷர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்படியிருக்க அவருக்கும் நமக்கும் சம்பந்தமில்லாத ஒரு நாமத்தினாலே ஆலயம் அல்லது ஏதோ ஒரு சபை என்று அழைக்கப்படுவது சரியல்ல. முற்பிதாக்களாகிய இஸ்ரவேலர் கர்த்தருடைய சயைார் என்று அழைக்கப்பட்டது போல இன்று நாமே அவருடைய ஆலயமாக இருப்பதால் கிறிஸ்துவின் சயைார் என்று அழைக்கப்படுவதுதான் சரியானது. அது வேதாகமத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடாக இருக்கிறது. நீங்கள் இப்படியாக அழைக்கப்பட்டு தேவனுடைய ஆலயமாக அவருடைய நற்செய்தியை அறிவிக்கும் ஆலயமாக, நற்கிரியைகளைச் செய்யும் நடமாடும் ஆலயமாக செயல்படுங்கள். அப்பொழுது நீங்களே மெய்யான தேவனுடைய ஆலயமாக இருப்பீர்கள்.

**தேவன் மெய்யாகவே மனிதர்கள் மத்தியில் வாசம் செய்வாரா?**

ஆதிமுதலாக மனிதன் கட்டிடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தனக்கும் தேவனுக்கும் ஒரு பெரிய நடுச்சுவரை ஏற்படுத்திவிட்டான். தேவனாகிய கர்த்தர் ஆதாமோடு உறவாடுகிற தேவனாக இருந்தார். இயேசு ஜனங்கள் மத்தியில் ஜீவித்தார். ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்கண்டார்கள். அவர் ஏழ்மையானவர்களோடும், வியாதியினால் புறம்பாக்கப்பட்டவர்களோடும் வாசம்பண்ணி தான் தேவனிடத்திலிருந்து வந்த ஆண்டவர் என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். தேவன் மனிதனோடு வாழ்ந்தார், வாழ்கிறார் என்பதை அறிகிறோம். மேலும் வேதம் சொல்கிறது; "பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக்கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று வாசிக்கிறோம் (வெளி.21:3). தேவன் மனிதர்களோடு வாசம்செய்யும்போது அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். அவருடைய பிரசன்னம் அவர்களை வழிநடத்தும். அவர்களுடைய வாயில் வாஞ்சனை இருக்காது, பொல்லாப்பானவைகளை விட்டு விலகி நன்மைசெய்வார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை சமாதானமுள்ளதாக இருக்கும். தேவன் உங்கள் மத்தியில் வாசம் செய்ய உங்களை ஆண்டவருடைய வசனங்களுக்கு ஒப்புக்கொடுங்கள். தேவனோடு வாழும் வாழ்க்கையை பெற்றுக்கொண்டு சந்தோஷமாயிருங்கள். தம்மிடம் வருவோரை ஒருபோதும் புறம்பே தள்ளாதவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. இன்றே கர்த்தருடைய ஜனங்களோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.



## வேத அறிவுப்போட்டி *248*-ன் விடைகள்

1. எரேமியாவின் புலம்பல் - புலம்பல் 3:52
2. கொரிந்து - 2கொரி.12:17
3. பத்தோஸ் - எசே.29:14
4. பேதுரு - கலா.2:14
5. நேபுகாத்நேச்சார் - தானி.4:5
6. இயேசுவுக்குள் - எபே.1:7
7. ஆதாமைப்போல, ஓசியா - ஓசியா 6:7
8. பவுல் - பிலி.4:12
9. யோவேல் - யோவே.1:20
10. பவுல் - கொலோ.2:4

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. S. செல்வராஜ்சாலமோன் - வள்ளியம்மாள்புரம்
2. B. ஞானதீபம் ஜெபராஜ் - இடையன்குடி
3. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
4. C. அருள்ராஜ் - சென்னை
5. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
6. J. பிச்சை - விருதுநகர்
7. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
8. S. சாந்தகுமாரி - நாசரேத்
9. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
10. V.C. ரூபவல்யா - நாசரேத்
11. Mrs. வசந்தாரபீந்திரன் - நாசரேத்
12. Miss. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
13. Sis.R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
14. M. ராமசந்திரன் - ஒட்டநத்தம்
15. Mrs. பாலின்மார்டின் - காரைக்குடி
16. Mrs. ஞானம்பிலிப் - கோவை
17. D. அன்புக்கமலம் - கோவை
18. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
19. Sis. விஜயா காந்தி - கூத்தம்பாக்கம்
20. S. ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
21. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
22. E. அதிசயம் - பனைகுடி
23. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
24. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் - திருநெல்வேலி
25. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
26. Mrs. ருக்மணி ஜெயசீலன் - தேனி
27. Mrs. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
28. J. செல்வராஜ் - தூத்துக்குடி
29. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
30. Mrs. மேரி நிர்மலாஆபிரகாம் - மதுரை
31. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
32. Mrs. மேரிஜெயக்குமார் - மதுரை
33. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
34. Mrs. ஜெயமணிராஜாமணி - கடலூர்
35. T. ராஜாத்தி - கோம்பை
36. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
37. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
38. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
39. Mrs. ராஜம்மாள் - சென்னை
40. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
41. R. பாரதி - ஈரோடு
42. J. ஆலிவ் - கோவை
43. Miss. சாந்தாதேவி - தேனி
44. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
45. J. ஜான்சி - ஆனைமலை
46. Mrs. பியூலாஜேசுராஜன் - பாண்டிச்சேரி

## வேத அறிவுப்போட்டி *249*-ன் விடைகள்

1. ஆமோஸ் - ஆமோ.7:8
2. தேவனுடைய - 1தெச.5:18
3. ஒபதியா - ஒப.7
4. பாவ மனுஷன் - 2தெச.2:4
5. நினிவேயின் ராஜா - யோனா 3:8
6. அற்ப - 1தீமோ.4:8
7. மீகா - மீகா 5:12
8. பவுல் - 2தீமோ.2:14
9. நாகூம் - நாகூ.3:13
10. தீத்து - தீத்து 1:5

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. Mrs. பியூலாஜேசுராஜன் - பாண்டிச்சேரி
2. Mrs. பாலின்மார்டின் - காரைக்குடி
3. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
4. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
5. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
6. E. அதிசயம் - பனைகுடி
7. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
8. D.A. அன்புக்கமலம் - காரைக்குடி
9. S. செல்வராஜ் சாலமோன் - வள்ளியம்மாள்புரம்
10. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
11. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
12. V.C. ரூபவல்யா - நாசரேத்
13. Mrs. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
14. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
15. Mrs. ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
16. M. ராமசந்திரன் - ஒட்டநத்தம்
17. Sis.R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
18. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
19. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
20. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
21. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
22. S. ஜாய் சந்திரகாந்தா - நெல்லூர்
23. Mrs. ஜாய் மேத்யூ - வி.கே.புரம்
24. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
25. Mrs. ஜெனிதர்மராஜன் - திருநெல்வேலி
26. J. பிச்சை - விருதுநகர்
27. Sis. விஜயா காந்தி - கூத்தம்பாக்கம்
28. Mrs. ஞானம்பிலிப் - கோவை
29. J. ஆலிவ் - கோவை
30. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
31. C. அருள்ராஜ் - சென்னை
32. Miss. ஏஞ்சலின் நேசமலர் - சமாதானபுரம்
33. Mrs. பாக்கியத்தாய்செல்வராஜ் - தூத்துக்குடி
34. S. ஓசியா ஹரிராகவன் - திருவள்ளூர்
35. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
36. R. பாரதி - கோபி
37. Mrs. எபிநேசர் எட்வர்டு - கடலூர்
38. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
39. S.A. சாமுவேல் - பரமத்தி
40. R.V. துரைச்சாமி - சேளூர்
41. S.R. பெரியசாமி - சேளூர்
42. Mrs. ருக்மணிஜெயசீலன் - தேனி



"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" - வெளி.2:10

இதைப்போலவே, நாம் எப்பேர்பட்ட துன்பத்தையும் தாங்கவேண்டும் அதன் விளைவு நம்முடைய இரட்சிப்பாக இருக்கும், நம்முடைய நஷ்டமாக இராது!

✦ நாம் ஏன் "அசுத்தமான" வற்றோடு பங்குகொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?

ஏனென்றால் நம்முடைய பிதாவும், இயேசுவும் பரிசுத்த மானவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாமும் பரிசுத்தமாயிருப்பதின் மூலம் குடும்ப சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த பாவம் நிறைந்த உலகத்தின் "அசுத்தமான" வற்றிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளுவது நம்முடைய பாதுகாப்பாயிருக்கும், அது நம்முடைய தியாகமல்ல. தேவன் தடுக்கிறது நமக்கு நல்லதாயிருக்கிறது என்பதும் இல்லை. அவர் எதிர்பார்க்கிறது நமக்கு தீமைநிறைந்தாயிருக்கிறது என்பதும் இல்லை. நம்முடைய அன்பின் பிதா- நாம் முழுமனதோடே ஐக்கியங்கொண்டு அவருடைய பிள்ளைகளாக இருக்க விரும்பியதால், அவர் எல்லாவற்றிலும் நம்மோடிருக்கிறார்!

"என்னிடத்தில் வாருங்கள்" என்ற இயேசுவினுடைய அழைப்பு நம்முடைய சுய நன்மைக்கென்று மாறாத இனிய வாக்குத்தத்தினைக் கொண்டிருக்கிறது. அவர், "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத்.11:28,29) என்கிறார்.

நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை மிகக்கடினமானது என தீர்மானித்திருப்பீர்களென்றால், திரும்பிச் சென்று இந்த தெரிந்துகொள்ளுதலை மறு ஆய்வு செய்யுங்கள். கிறிஸ்துவுக்குள்ளான இனிமையும் இளைப்பாறுதலும் நிறைந்த வாழ்வின் நன்மையினை இழந்துவிடாதீர்கள். பாவம் நிறைந்த உணர்வுகளை வெறுப்பது என்பது மிகக்கடினம் என உங்களிடம் கூறுகின்ற சாத்தான் ஒரு பொய்யன்.

## நான் யார்?



- நான் மோவாபிய பெண்
- என் மாமியை நோக்கி உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றேன்
- குணசாலியான ஸ்திரீ என்ற பெயரைப் பெற்றேன்
- என்னை போவாஸ் விவாகம்பண்ணினார்
- நான் ஓபேத்தைப் பெற்றேன்
- ஓபேத் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்
- என் பெயர் தமிழில் இரண்டு எழுத்து



# வாசல்களைத் திறவுங்கள் –Open Doors

-J.C.Choate



சபையின் பணி சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே **நம்முடைய** பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக்கிறோம்..... செய்யவேண்டிய அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சுவிசேஷப்பணி செய்யும்படிக்கு சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு, தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை **உருவாக்கலாம்**. அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு **முயற்சிசெய்வதன்** மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும், ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் **எதிர்பார்க்கமாட்டீர்கள்** - மேலும் வழக்கமாக நீங்கள் எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து

கொண்டு வருகின்றோம், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையுடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப் பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த



என்பது கர்த்தர் நம்மை நடத்துகிற வண்ணமாக அவரை பின்பற்றுகின்ற ஒரு செயலாகும்.

ஆம். மேலும் நாம் உலகத்தின் எண்ணங்களுக்கும் வழிகளுக்கும் பழக்கப்பட்டவர்களாயிருக்கும்போது தேவனுடைய மாதிரியின் மூலம் வாழ்வதற்கு கற்றுக்கொள்ளுவது என்பது எளிதானதல்ல. நாம் 2பேது.1:4ல் பேதுரு கூறுவது போல் திவ்வியசுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு - நம்முடைய பழைய மனுஷ சுபாவத்திற்குப் பதிலாக புதியதான நம்முடைய பிதாவின் சுபாவத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆனால் இந்த புதிய ஜீவியத்திற்குத் தேவையான 'கடினமாக' தோற்றமளிக்கின்ற இவற்றில் இனிமையும் அருமையுமான நோக்கமிருக்கிறது:

✦ நாம் ஏன் வெறுப்பதற்குப் பதிலாக அன்பு கூர அறிவுறுத்தப் பட்டிருக்கிறோம்?

ஏனென்றால் வெறுப்பு என்பது காயங்கட்டுவதற்குப் பதிலாக சத்துருக்களை உருவாக்கும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும்; வெறுப்பு தன்னைக் கொண்டிருக்கிற மனித சரீரத்தையே உருக்கி, முடிவிலே தன்னிலே கேடு விளைவிக்கும்!

✦ நாம் ஏன் மற்றவர் ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால் "இரண்டு மைல் தூரம் போக" அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?

ஏனென்றால் நாம் இருதயத்தில் மிகுந்த கோபத்துடனே (நம்முடைய சுய சரீரத்திற்குள் திராவகம் ஊற்றப்பட்டதுபோல) "முதல் ஒரு மைல் தூரம்" செல்லுவோம், ஆனால் நாம் விருப்பத்துடனே இரண்டாவது மைல் தூரம் செல்ல முயற்சிப்போமானால், நம்முடைய இச்செயல் நம்முடைய கோபத்தை ஆற்றும் மேலும் இவ்வாறாக நம்முடைய ஆவிக்குரிய, உணர்ச்சிபூர்வமான, சரீரப்பூர்வமான ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்!

✦ நாம் ஏன் நம்மை நாமே வெறுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?

ஏனென்றால் இயேசுவும் கூட, "..... என்னிமித்தமாக வீட்டையாவது. சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இம்மையிலே நூறத்தனையாகவும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான்" என வாக்களித்துள்ளார். ஆனால் நாம் தாமே இச்சைகளையும் உலகத்தின் தீமைகளையும் வெறுக்காதிருக்கும் வரையில் அவர் தம்முடைய விருப்பத்தையும் வாக்களித்திருக்கிறதையும் நமக்காக அவர் செய்யமுடியாது.

✦ நாம் ஏன் வழியில் துன்பமிருக்கும்போதும் கூட இயேசுவைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம்?

ஏனென்றால், இவ்வுலகில் நாம் ஜீவிப்பதற்கான சரியான மாதிரியை அவர் நமக்குக் காண்பித்திருக்கிறார், மேலும் நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோமானால் இம்மையிலும் மறுமையிலும் சகலமும் நமக்கு நன்மையாகயிருக்கும். துன்பமா? முழுவதும் அச்சமூட்டுகிறதும் தியாகம் பண்ணுகிறதுமாக எண்ணி நாம் பயப்படுகிறோம். ஆனால் இது நாம் இரட்சிப்படையும்படிக்கு இயேசு சுமந்த சிலுவையின் மூலம் நிறைவேறியது.

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவராயிருப்பது மிகக் கடினம்

## Being A Christian Is Too Hard

*-Betty*



இயேசு, உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஒருவன் உங்களை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் கொடுங்கள், மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுபோன்ற பல கட்டளைகளைக் கொடுத்தார். அவர் தம்முடைய சீஷர்களை நற்குணராகயிருக்கவும், மற்றவர்கள் ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால், இரண்டுமைல் தூரம் போக விருப்பமாயிருக்கவும் கேட்டுக் கொண்டார். (மத்.5,6,மற்றும்7-ம் அதிகாரங்களை பல அடிப்படை சத்தியங்களுக்காக பாருங்கள்)

சிலநேரங்களில் ஜனங்கள் கிறிஸ்தவத்தின் மிக உயர்ந்த நன்னெறிகளையும், சமூக நிலைகளையும் வாசிக்கும் போது, அவர்கள், "இது மிகக்கடினம்" நான் இப்படிப்பட்ட நல்லவனாக இருக்கமுடியாது; உண்மையில், மேலும் நான் இப்படிப்பட்ட நற்குணசாலியாகயிருக்க முயற்சிக்கவில்லை, ஏனென்றால் நான் உலகத்திலுள்ள இனிமையான, சந்தோஷமான ஒவ்வொன்றையும் விட்டுவிட வேண்டியிருக்கும் என முடிவு செய்கின்றனர்.

எனவே கிறிஸ்தவத்தை புறக்கணிக்க தீர்மானம் செய்யப்படுகிறது ஏனென்றால் இதன் வாழ்க்கைத் தரம் உண்மைக்கும் மேலாக உயர்ந்தது எனக் கருத வசப்படுத்தப்படுகின்றனர்.

இயேசு இவ்வாறு அழைக்கிறார் என்பது உண்மை: "ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்"(லூக்.9:23). தேவனால் மேலும் நாம் அறிவுறுத்தப்படுகிறோம், "...நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமா யிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"(2கொரி.16:17,18)

குறிப்பிடப்பட்டுள்ள பல வசனங்களில் இவ்வசனங்கள் தேவனைப் பற்றிய பல மிகமுக்கியமான காரியங்களைக் நமக்கு கூறுகிறது. (1) நாம் அவருடைய நிலைக்கு வரவேண்டும்; நமக்காக அவர் தம்மை குறைத்து கொள்ளுகிறதில்லை. (2) கிறிஸ்தவத்தின் அடிப்படை சுய-வெறுப்பு ஆகும். (3) நாம் ஒரு கிறிஸ்தவனாகயிருக்க எப்பேர்பட்ட நஷ்டத்தையும் தாங்கிக் கொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும் - அது நம்முடைய சிலுவை. (4) கிறிஸ்தவ வாழ்க்கை



இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமான காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும் நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள்

எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர்களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகக் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, "....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், "....இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், "..... அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2) என்றார்.



செயல்பாடு நன்மையானதாக அல்லது தீமையானதாக இருக்கிறது. தெசலோனிக்கேயாவிலிருந்த சபையார் அவர்களுடைய பகுதியிலே ஒரு பலம் வாய்ந்த முன்மாதிரியாக இருந்தபடியினாலே புகழப்பட்டார்கள் (1தெச.1:7). ஒரு பலம் வாய்ந்த சபையின் சிறந்த முன் மாதிரியினாலே மற்ற பலவீனமான சபைகள் உற்சாகப்படுத்தப்படமுடியும். ஒவ்வொரு பிராந்திய சபையின் முன் மாதிரியையும் நாமகரண கூட்டத்தாரும், அஞ்ஞானிகளும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு, தம்முடைய ஜனங்கள் மலையின் மேலிருக்கிற ஒரு பட்டணத்தைப் போன்று இருக்க வேண்டும், அது மறைந்திருக்க மாட்டாது என்றார் (மத்.5:14). அவர் சொன்னார் ஒரு கிறிஸ்தவன் விளக்கைப் போன்று இருக்க வேண்டும் என்று சொன்னார். அவர்கள் குழுவாக ஒன்றுசேரும் பொழுது ஒரு பிரகாசமான பட்டணத்தைப் போன்று வெகு தூரத்திலிருந்தும் காணத்தக்க வகையில் இருக்கிறார்கள் என்று எண்ணி பிராந்திய சபைகள் சிறந்த முன்மாதிரிகளாக இருக்கவேண்டியதாயிருக்கிறது.

**6. ஒவ்வொரு அங்கத்தினர்:** ஒவ்வொரு அங்கத்தினரும் பிரகாசமாக ஒளிராவிட்டால் ஒரு பிராந்திய சபையானது ஒரு பிரகாசமுள்ள விளக்காக இருக்க முடியாது. "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:16). ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியமும் எல்லா மனுஷரும் அறிந்திருக்கிறதும், வாசித்தும் இருக்கிற நிருபமாய் இருக்கிறது (2கொரி.3:3). கர்த்தருடைய சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் கட்டாயமாக மெய்யாகவே கிறிஸ்துவைப் போல ஒவ்வொரு நபருக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

**கேள்விகள்**

1. இயேசு நம்முடைய மகா ------------------ இருக்கிறார் என்று எபி.4:15 கூறுகிறது.

2. 1பேது.5:4 இயேசுவை --------------- என்று அழைக்கிறது.

3. மூப்பர்கள் முதலாவது --------------- குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று வெளிப்படுத்துகிறது அப்.20:28 வசனம்.

4. 1பேது.5:3ன் படி மூப்பர்கள் மந்தைக்கு ------------- --------------- தேவையாயிருக்கிறது.

5. உதவிக்காரர்கள் முன் மாதிரிகளாக இருக்க வேண்டும் என்பதை காட்ட ஒரு வசனக்குறிப்பை அளிக்கவும்.

6. 1தீமோ.3:7 மூப்பர்கள் ------------------ ---------- நற்சாட்சி பெற்றவர்களாயிருக்க வேண்டுமென்று சொல்லுகிறது.

7. 1தீமோ.4:12 சுவிசேஷகர்கள் --------- ஒரு ----------- இருக்க வேண்டுமென்று உரைக்கிறது.

8. 1தீமோ.4:16 எந்த இரண்டு காரியங்களைக் குறித்து சுவிசேஷர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று உரைக்கிறது? ------------- -----------------.

9.2தீமோ.1:5 தீமோத்தேயுவின் தாய் பெயர் ----------- என்றும் பாட்டியின் பெயர் -------- என்றும் சொல்லப்படுகிறது.

10. பிராந்திய சபைகள் அவசியம் முன்மாதிரிகளாக இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் இரண்டு வசனக்குறிப்புகளை அளிக்கவும். --------- ---------.

**தெரிந்து கொள்ளுவோம்** வெர்ஜின் தீவு

**அமெரிக்காவை கண்டு பிடித்த கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1493ம் ஆண்டு சில புதிய தீவுகளையும் கண்டுபிடித்தார். அன்று "கன்னியர் தினம்" என்பதால் அப்பொருள்பட அத் தீவுகளுக்கு 'வெர்ஜின் தீவுகள்' என்ற பெயரிட்டார்** *- K.R.K.Ravi Asir*

அவர்களுடைய தகுதிகள் இருக்கின்றன. முதலாவது மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், ஏனென்றால் அவர்கள் நற்சாட்சி பெற்றவர்களாகவும், பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும் (அப்.6:3). மூப்பர்கள் முதலாவதாக சோதிக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்படாதவர்களாகவும், நிந்தை இல்லாதவர்களாகவும் காணப்பட வேண்டும் (1தீமோ.3:10). மூப்பர்களும், உதவிக்காரர்களும் உண்மையாகவே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் நல்ல முன் மாதிரிகளாக தகுதி பெற்றவர்களாயிருக்கிறார்கள். சபையானது அவர்களை பின்பற்ற வாஞ்சையாய் இருக்கிறது. ஏனென்றால் அவர்களுடைய ஜீவியங்கள் சிறந்த முன்மாதிரிகளாய் இருக்கின்றன. வேறெந்த காரணத்திற்காகவும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட அல்லது பின்பற்றப்பட வேண்டாம். கர்த்தருடைய சபையின் ஆளுகையானது மாதிரியாய் இருப்பதை அடிப்படையாகக் கொண்டதாயிருக்கிறது. மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள் மற்றொரு அங்கத்தினரை கடிந்து கொள்ளும் பொழுது, அவர்களுடைய ஜீவியம் சிறந்த முன்மாதிரிகளாக இருக்க வேண்டும். வேதாகமம் சொல்கிறது ஒரு மூப்பர் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய குடும்பத்தை விசாரிக்க முடியாது" என்று (1தீமோ.3:4,5) அவர் சபைக்கு புறம்பானவர்களாலும் நற்சாட்சி பெற்றவராயிருக்க வேண்டும் (1தீமோ.3:7). மூப்பர்களும், உதவிக்காரர்களும் சிறந்த முன்மாதிரிகளாக இருக்க வேண்டியது மிக அவசியமானது.

**3. சுவிசேஷகர்கள்:** பிராந்திய சபைக்கு மற்றொரு முக்கியமான முன் மாதிரியாக இருப்பவர் பிரசங்கியார். சுவிசேஷர்களுக்கு அவர்கள் மாதிரிகளாயிருக்க வேண்டுமென்று கட்டளை இடப்பட்டிருக்கிறது (1தீமோ.4:12). அவர்கள் வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரிகளாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்று (1தீமோ.4:16) சொன்னார். ஒரு சரியான முன்மாதிரியை ஏற்படுத்துவதன் மூலம் போதனையினாலும் அவர் தன்னையும் தனக்குச் செவி கொடுத்தவர்களையும் இரட்சித்துக் கொண்டார். ஆனால் ஒரு நல்ல ஜீவியம் இல்லாமல், அல்லது நல்ல போதனையின்றி தன்னையும், தனக்கு செவி கொடுத்தவர்களையும் இரட்சித்து கொண்டிருக்க முடியாது. பவுல் தெசலோனிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே, நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும் இருந்தோம்" என்று (2தெச.3:7) சொன்னார். பவுலின் கிரியைகள் தம்மை ஜனங்களுக்கு ஒரு முன்மாதிரியாக ஆக்க வேண்டியதாயிருந்தது என்று விளக்கினார் (வச.10). சுவிசேஷகர்கள் சபைக்கு முன்பாக சிறந்த முன்மாதிரிகள் ஆகும்படி கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறார்கள்.

**4. பெற்றோர்கள்:** கிறிஸ்தவ தகப்பன்மாரும், தாய்மார்களும் அவசியம் தங்களுடைய பிள்ளைகளுக்குச் சிறந்த மற்றும் பலம் வாய்ந்த முன்மாதிரிகளாக இருக்க வேண்டும். வாலிபனாக இருந்த தீமோத்தேயுவுக்கு ஒரு விசுவாசம் நிறைந்த தாயும், பாட்டியும் அவருக்கு முன் மாதிரியாக இருந்தார்கள் (2தீமோ.1:5). ஒரு பிள்ளைக்கு அவனுடைய பெற்றோரைப் பார்க்கிலும் பலம்வாய்ந்த எந்த முன் மாதிரியும் இருக்கிறதில்லை. ஒரு பிள்ளையானவன் தன்னுடைய பெற்றோர் வீட்டிலே என்ன செய்கிறார்கள் என்பதை மெய்யாகவே அறிந்து கொள்கிறான். அவன் வஞ்சிக்கப்பட முடியாது. இது அநேகம் ஸ்திரீகளை வேதாகமத்தை வாசிக்க, போதிக்க இயலாதவர்களாய் இருந்தாலும் சிறந்த முன் மாதிரியினாலே வேதாகமத்தை போதிக்க முடியும் என்ற நிலையை அடைவார்கள். பெற்றோர்கள் சபையிலே முக்கியமான உதாரணங்களாக அல்லது முன் மாதிரிகளாக இருக்கிறார்கள்.

**5. பிராந்திய சபைகள்:** முழு பிராந்திய சபையும் மற்றவர்களுக்கு காட்டுகிற



இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேவனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து; நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமையுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து "இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்" எனக் கூறுவோமாக.

**நடப்புச் செய்திகள்**

- தமிழகத்தில் சாதாரண நகரபேருந்துகளில் மகளிர் அனைவரும் இலவசமாக பயணம் செய்யலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழ் நாட்டில் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும் என முதல்வர் மு க ஸ்டாலின் தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.
- உலகின் மிக மகிழ்ச்சியான நாடு பின்லாந்து



கிறிஸ்துவின் சபை
ஊழியர்
சகோதரரர் எ.ஸ் பொன்னுசாமி
அவர்கள் கடந்த
27.05.2021
வியாழக்கிழமை
கர்த்தருக்குள் மரித்துவிட்டார்.
அவருடைய
குடும்ப ஆறுதலுக்காக ஜெபியுங்கள்

**கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்**
**இதுமுதல் பாக்கியவான்கள்**
**வெளி.14:13**

**வேதாகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



தற்சோதனை பகுதி - 34

**34. யோவான்ஸ்நானகன் அற்புதம் செய்தாரா?**

1. யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை ☐ வசன ஆதாரம் -

2. எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தான் நதியில் அவனால் செய்யப்படும் அற்புதத்தை காண சென்றார்கள் ☐ வசன ஆதாரம் -----------------------------------------------

3. யோவான் பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்குக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து பிரசங்கித்தான் ☐ வசன ஆதாரம்----------

4. தூற்றுக்கூடை என் கையில் இருக்கிறது என்றான் ☐ வசன ஆதாரம் -

5. இயேசு யோவானாலே ஞானஸ்நானம் பெற்றார் ☐ வசன ஆதாரம்-

6. ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசு ஞானஸ்நானம் பெறவில்லை ☐ வசன ஆதாரம் ----------------------------------

7. யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்திருந்தான் ☐ வசன ஆதாரம்-

8. யோவான் மெல்லிய வஸ்திரம் தரித்திருந்தான் ☐ வசன ஆதாரம்-

9. ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனுமில்லை ☐ வசன ஆதாரம் ---------------------------

10. யோவான் போஜனபானம் பண்ணுகிறவனாய் இருந்தான் ☐ வசன -


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**
**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** *Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் - 15**

**சபையிலிருக்கிற யார் முன் மாதிரிகளாயிருக்கிறார்கள்?**

**வரைகுறிப்பு**

1. **கிறிஸ்து**
2. **மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள்**
3. **சுவிசேஷகர்கள்**
4. **பெற்றோர்கள்**
5. **பிராந்திய சபைகள்**
6. **ஒவ்வொரு அங்கத்தினர்**

**கலந்துரையாடல்**

**1. கிறிஸ்து:** ஒவ்வொரு அலுவலரும், ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டியதை காட்டுவதின் மூலமாக முன்மாதிரியாக இருப்பதன் முக்கியத்துவத்தை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் உலகம் அல்லது மற்றொருவர் மேல் பலாத்காரமாக அல்லது இலஞ்சத்தினாலே செல்வாக்கை செலுத்துகிறதில்லை. அவர்களுடைய செல்வாக்கு அவர்களுடைய முன்மாதிரியில் இருந்து வருகிறது. கிறிஸ்தவர்கள் செய்யவேண்டியதாய் இருக்கிற அனைத்தையும் முதலாவதாக கிறிஸ்துதாமே செய்திருக்கிறார். அவர் செய்யவும், உபதேசிக்கவும் ஆகிய இரண்டையும் தொடங்கினார் (அப்.1:1). நாம் அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார் (1பேது.2:21). நம்முடைய பெலவீனங்களின் உணர்வோடு கூட நம்முடைய மகா பிரதான ஆசாரியராயிருக்கிற அவருடன் தொடர்பு கொள்ளப்படமுடியும். அவர் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிறார் (எபி.4:15). இயேசு தம்முடைய ஆடுகளை விரட்டுகிறவராக அல்ல, வழிநடத்துகிற பிரதான மேய்ப்பராக இருக்கிறார் (1பேது.5:4). இயேசுவின் நாட்களில் மேய்ப்பர்கள் தங்களுடைய ஆடுகளுடனே நெருக்கமாக ஜீவித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பிராணியையும் தனிப்பட்டட வகையில் அறிந்திருந்தார்கள். மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளில் அன்புகூர்ந்தான், ஆடுகளும் தங்களுடைய மேய்ப்பனை பின்பற்றும்படியாக அவனிடத்தில் அன்பாயிருந்தன. மேய்ப்பன் எப்பொழுதும் தன்னுடைய மந்தைக்கு முன்பாகச் சென்றான். அவைகள் பின்பற்ற வேண்டிய பாதையை அவன் அவைகளுக்கு காட்டினான். அவன் ஒருபோதும் அவைகளை அடிக்கவும் இல்லை, வற்புறுத்தவும் இல்லை. அவன் அவைகளை விரும்பவும், பின்பற்றவும் தக்கவகையில் ஆடுகளை மெதுவாக மேய்த்தான். இவ்விதமான மேய்ப்பராகவே கிறிஸ்து இருக்கிறார்.

**2. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள்:** பிராந்திய சபையின் மேற்பார்வையாளர்களாகவும் ஊழியர்களாகவும் மேய்ப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் மந்தைக்கு முன்மாதிரிகளாக இருக்க வேண்டியது அவசியம். எபேசுவிலிருந்து வந்த மூப்பர்கள் முதலாவது தங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. பின்னர் அவர்கள் மந்தையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கும்படி சொல்லப்பட்டது (அப்.20:28). "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" என்று 1பேது.5:3 சொல்கிறது. மற்ற அங்கத்தினர்களுக்கும், உலகத்துக்கும் மாதிரிகளாக மூப்பர்கள் இருக்கும் வகையில்